RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்

சிவகங்கை மலர்-5 இதழ்- 161 ஜூன்.18 2026 வியாழக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

தமிழக சிறைத் துறையில் பணியிட மாற்றங்களை முறைப்படுத்த புதிய வாரியம் அமைப்பு

டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் நடவடிக்கை

சென்னை: ஜூன்.18-

தமிழக சிறைத் துறையில் நிர்வாக செயல்பாடுகளை மேலும் வெளிப்படையானதாகவும், ஒழுங்குமுறையுடனும் மாற்றும் நோக்கில், புதிய இடமாற்ற வாரியத்தை, சிறைத் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் அமைத்துள்ளார்.

அரசு துறைகளில் பணியிட மாற்ற நடைமுறைகளை மையப்படுத்தி வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதேபோல், சிறைத் துறையிலும் தற்போது நிர்வாக சீர்திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, சிறைத் துறை பணியாளர்களின் பணியிட மாற்றம் மற்றும் புதிய பணி நியமனங்களை வெளிப்படையாகவும், ஒழுங்குமுறையுடனும் மேற்கொள்ளும் நோக்கில், சிறைத் துறையில் புதிய வாரியத்தை (Transfer Board) சிறைத் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் அமைத்துள்ளார்.

இதற்காக, அத்துறை ஐஜி தலைமையில் 4 பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது.

சிறைத் துறையில் பணியிட மாற்றங்கள் தொடர்பாக எழும் நிர்வாக சிக்கல்கள், பணியாளர்களின் கோரிக்கைகள் மற்றும் சேவைத் தேவைகளை ஒருங்கிணைத்து தீர்வு காணும் நோக்கில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

குறிப்பாக, 2ம் கிரேடு வார்டன்கள், முதல் நிலை வார்டன்கள், தலைமை வார்டன்கள் மற்றும் சிறை அதிகாரிகள் வரையிலான பணியிட மாற்றங்கள் இந்த வாரியத்தின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட உள்ளது.

பணியிட மாற்றங்கள் மற்றும் புதிய நியமனங்கள் தொடர்பான விவகாரங்களை ஆய்வு செய்ய இந்த வாரியம் 2 மாதங்களுக்கு ஒருமுறை கூட உள்ளது. தேவைக்கேற்ப அவசரக் கூட்டங்களும் நடத்தப்படலாம் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைத் துறையின் நிர்வாக நடைமுறைகளை எளிமைப்படுத்துவதோடு, பணியாளர்களின் இடமாற்றம் தொடர்பான புகார்கள் மற்றும் கோரிக்கைகளை விரைவாக பரிசீலித்து முடிவு எடுப்பதற்கும் இந்த வாரியம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பணியிட மாற்றங்களில் ஒரே மாதிரியான நடைமுறையை பின்பற்றுவதன் மூலம் வெளிப்படைத் தன்மை மற்றும் நிர்வாக திறன் மேம்படும். புதிய வாரியம் அமைக்கப்பட்டுள்ளதன் மூலம், பணியிட மாற்றம் மற்றும் பதவி நியமனங்களில் தெளிவான நடைமுறைகள் பின்பற்றப்படும் என்ற எதிர்பார்ப்பு சிறைத் துறை பணியாளர்களிடையே உருவாகியுள்ளது.

இதன் மூலம், நீண்டகாலமாக நிலவி வந்த சில நிர்வாக பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக, சிறைத் துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ரூ.1 கோடி மான நஷ்டஈடு கேட்டு மு.க.ஸ்டாலினுக்கு நோட்டீஸ்: அமைச்சர் ஆதவ் அர்ஜூனா அனுப்பினார்

சென்னை: ஜூன்.18-

ரூ.1 கோடி மான நஷ்டஈடு கேட்டு திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

அமலாக்கத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பை சுட்டிக்காட்டி, 'ரூ.258 கோடி மதிப்பிலான போதைப் பொருள் கடத்தலில் மூளையாக செயல்பட்ட ஜான் பிரிட்டோ, தவெக அரசின் பொதுப் பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவின் நெருங்கிய உறவினர் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மை அம்பலமாகியுள்ளது' என திமுக தலைவர் ஸ்டாலின், கட்சியின் எக்ஸ் தள பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இது தனது நற்பெயருக்கு களங்கம்

விளைவிப்பதாக கூறி ஆதவ் அர்ஜூனா தரப்பில் திமுக தலைவர் ஸ்டாலினுக்கும், திமுக ஐ.டி. பிரிவுக்கும் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

ஆதவ் அர்ஜூனா சார்பில் வழக்கறிஞர்கள் ஏ.பி.சூரியபிரகாசம், ஆர்.மோகன் பார்த்தசாரதி ஆகியோர் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். அதில், 'அமலாக்கத் துறை செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ள ஜான் பிரிட்டோ எனது உறவினர் அல்ல.

இது சம்பந்தமாக எனது உறவினர் ஜான் பிரிட்டோ ஊடகங்களில் விளக்கம் அளித்துள்ளார். திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட பதிவுக்கு நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும்.

ரூ.1 கோடிமான நஷ்ட ஈடு வழங்க வேண்டும். தவறினால் குற்றவியல் மற்றும் உரிமையியல் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' என கூறப்பட்டுள்ளது.

பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட குழந்தையின் குடும்பத்துக்கு அரசு சார்பில் ரூ.8 லட்சம் நிவாரண நிதி: அமைச்சர் குமார் வழங்கினார்

கும்மிடிப்பூண்டி: ஜூன்.18-

கும்மிடிப்பூண்டி அருகே புதுப்பேட்டையில் பாலியல் வன் கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட 3 வயது பெண் குழந்தையின் குடும்பத்துக்கு அரசு சார்பில், ரூ.8 லட்சம் நிவாரண நிதிக்கான ஆணையை நேற்று செயற்கை நுண்ணறிவு துறை அமைச்சர் குமார் வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற் பேட்டையையொட்டியுள்ள புதுப் பேட்டை பகுதியில் கடந்த 14ம் தேதி மாலை, வீட்டு வாசலில் விளையாடி கொண்டிருந்த பிஹார் மாநில தம்பதியின் 3 வயது பெண் குழந்தை திடீரென காணாமல் போனது. நீண்ட நேர தேடுதலுக்குப் பிறகு அந்தக்குழந்தை, பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, அங்குள்ள முட்புதரில் வீசப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இதனால், அதிர்ச்சியடைந்த பெற்றோர் குழந்தையை மீட்டு சிகிச்சைக்காக கும்மிடிப்பூண்டி

அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட பின் மேல் சிகிச்சைக்காக சென்னை, ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், நேற்று முன் தினம் காலை அந்தக் குழந்தை உயிரிழந்தது.

இச்சம்பவம் தொடர்பாக, கும்மிடிப்பூண்டி சிப்காட் போலீஸார் போக்சோ, கொலை உள்ளிட்ட 4 சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து நடத்திய விசாரணையில், புதுப்பேட்டை பகுதியில் தங்கியிருந்த பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த பிப்பின் மான்ஜி (19) என்ற இளைஞர், வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை பிஸ்கட் கொடுத்து அழைத்து சென்று பாலியல் வன் கொடுமையில் ஈடுபட்டது தெரிய வந்தது.

இதையடுத்து, பிப்பின் மான்ஜி, சென்னை, புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில், குழந்தையின் பெற்றோரை நேற்று கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், அமைச்சர் ரா.குமார் சந்தித்து, ஆறுதல் கூறினார்.

முதல்வர் விஜய் வருத்தப்பட்ட தகவலையும் தெரிவித்தார். பிறகு, அவர், மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், தமிழக அரசின் குழந்தைகள் நலன், சிறப்பு சேவைகள் துறை சார்பில், குழந்தையின் குடும்பத்தினரிடம் ரூ.8 லட்சம் நிவாரண நிதிக்கான ஆணையை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, திருவள்ளூர் ஆட்சியர் கவிதா, பொன்னேரி சார் ஆட்சியர் அப்துல் ராசிக், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் நிஷாந்தினி, துணை ஆட்சியர் சண்முக பிரீத்தா, கும்மிடிப்பூண்டி எம்எல்ஏ எஸ்.விஜயகுமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

சிறப்பு 'டெட்' தேர்வை ஒரு மாதம் தள்ளிவைக்க வேண்டுகோள்

சென்னை: ஜூன்.18-

பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் நிறுவனர் அ.மாயவன், நிறுவன தலைவர் சி.ஜெயக்குமார், பொதுச்செயலாளர் மா.குமரேசன் உள்ளிட்டோர் பள்ளிக்கல்வி அமைச்சர் ராஜ்மோகனை சந்தித்துப் பேசினர். அப்போது 'டெட்' தேர்வு தொடர்பான மனுவை அளித்தனர்.

அந்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது: இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் அமல்படுத்தப்படுவதற்கு முன் பணியில் சேர்ந்தோருக்கு டெட் தேர்வில் இருந்து உச்ச நீதி மன்றம் விலக்கு அளிக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தனர்.

ஆனால் அனைத்து ஆசிரியர்களுக்கும் டெட் தேர்ச்சி கட்டாயம் என தீர்ப்பு வழங்கப்பட்டது. அதனால் ஜூலையில் நடைபெற உள்ள டெட் தேர்வுக்கு ஆசிரியர்கள் எவ்வித தயாரிப்பும் செய்யவில்லை.

எனவே, ஜூலையில் நடத்தப்பட இருக்கிற சிறப்பு டெட் தேர்வை ஒரு மாதம் தள்ளிவைக்க வேண்டும். கட்டாய கல்வி உரிமைச் சட்டம் அமல்படுத்தப்படுவதற்கு முன் பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இரண்டாண்டு பணிக்காலத்துக்கு ஒரு மதிப்பெண் என்று கணக்கிட்டு அந்த மதிப்பெண் அவர்களின் டெட் தேர்வு மதிப்பெண்ணுடன் சேர்த்து தேர்ச்சி அறிவிக்க வேண்டும்.

தற்போது உச்ச நீதி மன்றம் டெட் தேர்ச்சி பெறுவதற்கு 2028 வரை அவகாசம் வழங்கியிருப்பதால் பள்ளிக்கல்வித் துறை பட்டதாரி ஆசிரியர்களின் முன்னுரிமை பட்டியலை விரைவாக தயாரித்து அவர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும்.

பாலியல் வன்கொடுமைகள் குறித்து முதல்வர் விஜய் மவுனம் ஏன்? நயினார் நாகேந்திரன்

சென்னை: ஜூன்.18-

"பாலியல் வன்கொடுமைகள் குறித்து முதல்வர் விஜய் பேசுவதில்லை. கரூர் சம்பவம் போல, பாலியல் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் பனையூரில் வந்து தன்னை சந்திக்க வேண்டும் என நினைக்கிறாரா?" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "சூலூரில் 10 வயது குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்தது இன்றுவரை முதல்வர் விஜய்க்கு தெரியுமா? நேற்று முன்தினம் மூன்று வயது குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்து, முட்புதரில் வீசியது முதல்வருக்கு தெரியுமா" நெல்லையில் மட்டும் 7 பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நடந்துள்ளன.

முதல்வர் விஜய் டிஃபன் கொண்டு வருகிறார்; டிஃபன் கேரியர் வைத்திருக்கிறார். டிபன் சாப்பிடுகிறார் ஆனால் பேச மாட்டார். சினிமாவில் பிரபலமாக இருப்பவர்களை அழைத்துப் பேசி, படம் எடுத்துக் கொள்வார்.

பாலியல் வன்கொடுமைகள் குறித்து முதல்வர் பேசுவதில்லை; பேட்டி கொடுப்பதில்லை, பாதிக்கப்பட்டவர்களை சந்திப்பதில்லை. கரூர் சம்பவம் போல, பாலியல் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் பனையூரில் வந்து தன்னை சந்திக்க வேண்டும் என நினைக்கிறாரா விஜய்?,

ஆறு மாதத்தில் இடைத்தேர்தல் வர வேண்டியதன் அவசியம் என்ன?. குதிரை பேரம் நடப்பதாக பொன். ராதாகிருஷ்ணன் நேற்று சொல்லி இருந்தார். டிடிவி தினகரன் கட்சியிலிருந்து காமராஜை குதிரை பேரம் பேசி விலைக்கு வாங்கினார்கள். இது குறித்து உடனே சிபிஐ விசாரித்து அவர்களை தண்டிக்க வேண்டும். அவர்களை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என கோரிக்கை வைத்திருக்கிறோம்.

அதிமுக விலிருந்து ஒவ்வொருவராக விலை பேசி ஆதவ் அர்ஜூனா வாங்கிக் கொண்டிருக்கிறார். குதிரை பேரும் நடைபெறுகிறது என ஊடகங்கள் தெரிவிக்க வேண்டும். எல்லா நாளும் ஒரே நாள் போல இருக்காது; வருங்காலம் பாஜகவின் காலமாக இருக்கும்" இவ்வாறு அவர் பேசினார்.

present sale for
all over Tamil Nadu
தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

ஆனைமலை புலிகள் காப்பக விடுதிகளில் கேம்ப் ஃபயருக்கு ஐகோர்ட் தடை

மதுரை: ஜூன்.18-

ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் உள்ள தனியார் விடுதிகளில் கேம்ப் ஃபயர், இசை நிகழ்ச்சி நடத்த தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொடைக்கானலை சேர்ந்த பாலகிருஷ்ணன், செல்வ கணபதி உள்ளிட்ட 5 பேர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: "ஆனைமலை புலிகள் காப்பக இடையக பகுதி விரிவுப்படுத்தப்பட்டு கொடைக்கானல் மற்றும் திண்டுக்கல் வனப் பிரிவுகளின் சில பகுதிகளும் இணைக்கப்பட்டன. இந்த எல்லை பூண்டி கிராமத்தில் தொடங்கி மன்னவனூர், கூக்கால் ஆகிய கிராமங்கள் வழியாக ஆண்டிப்பட்டி வரை செல்கிறது.

தேசிய வனவிலங்கு வாரியத்தில் முன் அனுமதி இல்லாமல் இந்த பகுதியில் விடுதிகள், ஹோட்டல்கள், பூங்காக்கள் போன்றவை கட்டப்படக்கூடாது. ஆனால் கொடைக்கானலில் முறையான அனுமதி இல்லாமல் அங்கீகாரம் அற்ற வணிக கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

எனவே மன்னவனூர் கிராம ஆனைமலை புலிகள் காப்பகத்தின் இடையகப் பகுதியில் எவ்வித வணிக கட்டிடங்களுக்கும் அனுமதி வழங்க தடை விதிப்பதோடு, மன்னவனூர் கிராமத்தில், சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வணிக கட்டிடங்களை அகற்றவும், அதன் இயல்பான நிலைக்கு மீட்டெடுக்கவும் உத்தரவிட வேண்டும்," என மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில், வணிக ரீதியான கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதால் ஒவ்வொரு நாளும் 'கேம்ப் பயர்' அமைக்கப்பட்டு இசை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இந்த கட்டுமானங்கள் எவ்வித அனுமதியும் பெறாமல் கட்டப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

அவற்றை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், வழக்கு தொடர்பாக தமிழக வனத்துறை முதன்மைச் செயலர், ஆனைமலை புலிகள் காப்பக தலைமை வன பாதுகாவலர் பதில் மனு தாக்கல் செய்யவும், தனியார் விடுதிகளில் எவ்விதமான கேம்ப் ஃபயர் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடத்தக்கூடாது என்றும் உத்தரவிட்டு, வழக்கை வனம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அமர்வுக்கு மாற்றி ஒத்திவைத்தனர்.

கிருஷ்ணகிரி அணையில் படர்ந்துள்ள ஆகாயத் தாமரைகள் அகற்றும் பணிகள் நேற்று தொடங்கியது

கிருஷ்ணகிரி, ஜூன்.18-

கிருஷ்ணகிரி பகுதியில் சுற்றுலா தலமாக, கிருஷ்ணகிரி அணை திகழ்கிறது. இந்த அணைக்கு நாள்தோறும், கிருஷ்ணகிரி மாவட்டம் மட்டுமின்றி, தருமபுரி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், வேலூர் ஆகிய மாவட்டங்களில் இருந்தும், அண்டைய மாநிலங்களான கர்நாடக, ஆந்திராவில் இருந்தும் சுமார் 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வந்து செல்கின்றனர். தற்போது அணையில் 50 அடிக்கு நீர்மட்டம் இருந்தாலும், அணை முழுவதும் அதிகளவில் படர்ந்துள்ள ஆகாய தாமரைகளால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. இதே போல், ஆகாய தாமரைகள் அதிக அளவு தண்ணீரை உறிஞ்சி ஆவியாக்குவதோடு, சூரிய ஒளியையும் காற்றையும் தடுத்து நீர்நிலைகளை மாசு ஏற்படுவதாக, விவசாயிகள், சுற்றுலா பயணிகள் தெரிவித்து இருந்தனர். இந்நிலையில், அணையில் படர்ந்துள்ள ஆகாய தாமரைகள் அகற்றும் பணி நேற்று தொடங்கியது. இப்பணியை அணை நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் சபரிநாதன் மற்றும் அலுவலர்கள் பார்வையிட்டனர். இதுகுறித்து நீர்வளத்துறை அலுவலர்கள் கூறும்போது, அண்மையில் பெய்த மழையால், கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. அணைக்கு வந்த நீரில் அதிகளவில் ஆகாயத் தாமரைகள் அடித்து வரப்பட்டது. மேலும், ஏற்கனவே அணையின் ஒரு பகுதியிலும் ஆகாய தாமரைகள் படர்ந்திருந்தது. அதனை அகற்றும் பணிகள் இன்று(நேற்று) தொடங்கப்பட்டுள்ளது. ஒரு வாரத்தில் ஆகாயத் தாமரைகள் முழுவதும் அகற்றப்படும், என்றனர்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டத்தில் பழங்குடியினர் கிராமங்களில்ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் மற்றும் முடிவுற்ற பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

கோத்தகிரி, ஜூன்.18-

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டத்திலுள்ள பழங்குடியினர் கிராமங்களில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் மற்றும் முடிவுற்ற பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.நீலகிரி மாவட்டத்தில் வாழக்கூடிய பண்டைய பழங்குடியினருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு உதவிகளையும் செய்து வருகிறது. அந்த வகையில் கோத்தகிரி வட்டத்திற்குட்பட்ட தேனாடு கிராமத்தில், ரூ.24.60 இலட்சம் மதிப்பீட்டில் பழங்குடியினருக்காக கட்டப்பட்டு வரும் தச்சு மற்றும் இரும்பு வேலைக்கான பட்டறை கட்டடத்தினையும், கறிக்கையூர் கிராமத்தில் தொல்குடி திட்டத்தின் கீழ் ஐந்தினை பசுமை பண்ணை திட்டம் ரூ.72 இலட்சம் மதிப்பீட்டில் சிறு தானியங்கள் தயாரிக்கப்படுவதையும், கறிக்கையூர் கிராமத்தில், பெண்களின் முன்னேற்றத்திற்காக துணிப்பை தயாரிப்பு அலகு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டதையும், மெட்டுக்கல் பகுதியில், குருமிளகு தரம் பிரிக்கும் இயந்திரம் 9.45 இலட்சம் மதிப்பீட்டிலும், மெட்டுக்கல் கிராமத்தில், மிளகு நாற்றங்கால் உற்பத்தி செய்ய தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்படும் மிளகு நாற்றங்காலினையும் என மொத்தம் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் மற்றும் முடிவுற்ற பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.இவ்ஆய்வில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் திரு.ராமசாமி, கோத்தகிரி வட்டாட்சியர்மகேந்திர குமார், கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார், விவேக் உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திமிரி கோட்டையில் ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகம் கோலாகம்

ராணிப்பேட்டை, ஜூன்.18-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு வட்டத்திற்குட்பட்ட திமிரி கோட்டையில் அமைந்துள்ள ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேக விழா இன்று பக்தி பரவசத்துடன் நடைபெற்றது.விழாவை முன்னிட்டு கடந்த சில நாட்களாக யாகசாலைகள் அமைக்கப்பட்டு வேத விற்பன்னர்களால் சிறப்பு பூஜைகள் மற்றும் யாகங்கள் நடத்தப்பட்டன. தொடர்ந்து 108 வகையான ஓம திரவியங்கள் கொண்டு மகா யாகம் நடைபெற்றது. யாகசாலையில் பூஜிக்கப்பட்ட புனித கலச நீர் மேளதாள வாத்தியங்கள் முழங்க ஆலயத்தை சுற்றி ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.பின்னர் நிர்ணயிக்கப்பட்ட சுப முகூர்த்த நேரத்தில் விமான கோபுர கலசத்தின் மீது புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதையடுத்து மூலவருக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.இந்த ஆன்மிக நிகழ்வில் திமிரி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகத்தினர் மற்றும் ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர். நிகழ்ச்சியின் நிறைவாக கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் ஆலயம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. மகா கும்பாபிஷேக விழா பக்தர்களின் ஆன்மிக உற்சாகத்துடன் சிறப்பாக நிறைவடைந்தது.

■ செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கழகக் கொள்கை பரப்பு துணை செயலாளர் திண்டுக்கல் ஐ .லியோனி மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் மண்டல தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் வே.கருணாநிதி பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார் இ.எஸ்..பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன் மூ ரஞ்சன் பொன்ராம் கோல்டு டி.பிரகாஷ் எல். பிரபு கோ.ஜானகிராமன் வனஜா தயாளன் சத்திய பிரபு ஆகியோர் உடன் இருந்தனர்

சிறுவாபுரி முருகன் கோயிலில் குவிந்த பக்தர்கள் கூட்டம்: 2 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம்

பெரியபாளையம், ஜூன்.18-

சிறுவாபுரி முருகன் திருக்கோயிலில் செவ்வாய்க்கிழமை என்பதால் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. சுமார் 2 மணி பக்தர்கள் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அடுத்த சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் அமைந்துள்ளது. தொடர்ச்சியாக 6 வாரங்கள் இங்கு வந்து நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் வேண்டுதல் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது. அதிலும் முருகனுக்கு உகந்த செவ்வாய்க்கிழமை நாட்களில் சிறுவாபுரி கோயிலில் பக்தர்கள் அதிகளவில் வந்து செல்வது வழக்கம். அதன்படி, செவ்வாய்க்கிழமையான நேற்று சிறுவாபுரி முருகன் கோயிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

திருவள்ளூர் மாவட்டம் மட்டுமல்லாது சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் இருந்து ஏராளமானோர் சாமி தரிசனம் செய்ய வந்தனர். பொது தரிசனம், 50 ரூபாய் மற்றும் 100 ரூபாய் கட்டண தரிசனம் என அனைத்து வரிசைகளிலும் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. கோயிலுக்கு வெளியே நீண்ட வரிசையில் வந்து காத்திருப்பு மண்டபம் வழியே கோயிலுக்குள் வந்து சுமார் 2 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். புதிய வீடு கட்ட வேண்டும், திருமண தடை நீங்க வேண்டும், அரசியல், ரியல் எஸ்டேட் தொழில் என பல்வேறு வேண்டுதல் நிறைவேறுவதற்காக ஆலயத்தின் பின்புறம் உள்ள வேப்பமரத்தடியில் நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்தும், செங்கற்களை அடுக்கி வைத்தும் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தினர்

■ கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பில்லனகுப்பம் ஊராட்சியில், இந்தியன் வங்கி சார்பாக, ரூ.3 கோடியே 92 இலட்சம் மதிப்பில் ஊரக வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவன கட்டிட கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார். உடன், இந்தியன் வங்கி களப் பொதுமேலாளர் (கோயம்புத்தூர்) செல்வராஜ், இந்தியன் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன இயக்குநர் பிரசாந்த் (பெங்களூர்), இந்திய ஊரக சுய வேலைவாய்ப்பு இயக்குநர் வெங்கடேசன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) பெரியசாமி, இந்தியன் வங்கி முன்னோடி வங்கி மேலாளர் சசிகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

ஆரணியில் பள்ளி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை புகாரில் இருவர் கைது!!

ஆரணி, ஜூன்.18-

ஆரணி பகுதியில் ஒரே நாளில் இருவேறு இடங்களில் பள்ளி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை புகாரில் இருவர் கைது செய்யப்பட்டார். பிளஸ் 1 மாணவியை காதலிப்பதாகக் கூறி துன்புறுத்தியதாக இமானுவேல் (34) என்பவரும், சக தொழிலாளியின் மகளுக்கு பாலியல் தொல்லை அளித்ததாக லோகேஷ் என்பவரும் போலீசார் கைது செய்தனர்

ஆம்பூர் அருகே கொத்தடிமைகளாக இருந்த4 குழந்தைகள் உட்பட 9 பேர் மீட்பு!

தோல், ஜூன்.18-

ஆம்பூர் அருகே பைரப்பள்ளி பகுதியில் செங்கல் சூளையில் கொத்தடிமைகளாக இருந்த 4 குழந்தைகள் உட்பட 9 பேர் மீட்கப்பட்டனர். சின்ன கண்ணன் என்பவரது செங்கல் சூளையில் கொத்தடிமைகளாக இருந்த 9 பேரை வருவாய் துறையினர் மீட்டனர்

கன்னிகா புரத்தில் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்த கிணற்றை மூடியதால் பரபரப்பு!

ராணிப்பேட்டை, ஜூன்.18-

ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி ஒன்றியத்துக்கு உட்பட்ட கலவை அடுத்த கன்னிகாபுரம் பகுதியில் சுமார் மூன்று தலைமுறைகளாக பயன்படுத்தி வந்த கிணற்றை தனிநபர் ஆக்கிரமிப்பு செய்து மூடியதால் பெரும் பரபரப்பு. ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி ஒன்றியம் கலவை அடுத்த கன்னிகாபுரம் பகுதியில் சுமார் மூன்று தலைமுறைகளாக பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்த கிணற்றை ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் துணைத் தலைவர் கிராம நிர்வாக அலுவலர் துணையோடு தனிநபர் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து கிணற்றை மூடியதால் பொதுமக்கள் கிணற்றை பயன்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதைக் கேட்ட ஊர் பொதுமக்களை தகாத வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். மேலும் இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலரிடம் மனு அளித்துள்ளனர்.

குற்றால சாரலினால் கடையநல்லூரில் மூன்று நாட்களாக காணாமல் போன அரசு பேருந்து கண்டுபிடித்துக் கொடுத்த சட்டமன்ற உறுப்பினர்

தென்காசி, ஜூன்.18-

தென்காசி மாவட்டத்தில் கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருபவர் தி.மு. ராசேந்திரன் இவருக்கு கடையநல்லூர் செங்கோட்டை வழித்தடம் எண் 46 ஞி இயங்கி வந்த நகரப் பேருந்து மூன்று நாட்களாக கடையநல்லூர் பக்கம் காணாமல் போனது குறித்து சமூக ஆர்வலர்கள் அலைபேசி மூலம் அவருக்கு தகவல் அளித்தனர் திங்கட்கிழமை அன்று இரவு கடையநல்லூரில் இருந்து 9:35க்கு செங்கோட்டைக்கு இந்த தடம் எண் 46 ஞி பேருந்து செல்லும் மேல கடையநல்லூர் காசி தர்மம் அச்சன்புதூர் வடகரை பண்பொழி போன்ற பகுதிகளில் இருந்து கடையநல்லூர் நகர் பகுதிக்கு வேலைக்கு வரும் பெண்கள் கடையநல்லூர் அரசு கலைக் கல்லூரி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகள் டியூசன் முடித்துவிட்டு செல்வது இந்த தடத்தில் செல்லும் கடைசி வண்டியை நம்பித்தான் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அதிக அளவு பெண்கள் கடையநல்லூர் நகர் பகுதிக்கு வராததால் இந்த பிரச்சனை பெரிதாக தெரியவில்லை திங்கட்கிழமை அன்று பள்ளி கல்லூரி கடைகளுக்கு வந்த பெண்கள் இரவில் ஊருக்கு செல்ல முடியாமல் பேருந்து நிலையத்தில் தத்தளித்து வந்தனர் அப்போது அப்பகுதியில் நின்ற சமூக ஆர்வலர்கள் இதுகுறித்து விசாரித்து உடனடியாக கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அலைபேசி மூலம் தகவல் தெரிவித்தனர் அவர் உடனடியாக திருநெல்வேலி அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் நிர்வாக இயக்குனர் மற்றும் செங்கோட்டை புளியங்குடி பணிமனை மேலாளர்களுக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டு மூன்று நாட்களாக வண்டி அந்த தளத்தில் இயங்கவில்லை என்ன காரணம் என விவரம் கேட்டறிந்தார் பின்னர் நிர்வாக தரப்பில் சனி ஞாயிறு இரண்டு நாட்கள் குற்றாலத்தில் பெய்து வரும் சாரல் சுற்றுலா செல்ல தென்காசி பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்பட்டதாக தகவல் தெரிவித்தனர் குறிப்பாக சீசன் காலங்களில் நன்கு வருமானம் வரக்கூடிய வழித்தடங்களில் இருந்து பேருந்துகளை இப்படி மாற்றி விடுவது வழக்கம் ஆனால் அந்த தடத்தில் செல்லும் கடைசி பேருந்து இதுதான் என்பதால் பயணிகள் குறிப்பாக பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் கடைக்கு தினக்கூலிக்கு வந்து செல்லும் பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டன இனி இது போல்வழித்தடங்களில் செல்லும் பேருந்துகளை மாற்றுப் பேருந்து வேறு வழித்தடத்தில் செல்ல அனுமதிக்க கூடாது என கண்டிப்பாக போக்குவரத்து துறை அதிகாரிகளிடம் தெரிவித்ததை தொடர்ந்து செவ்வாய்க்கிழமை காலை காணாமல் போன அரசு பேருந்து கடையநல்லூர் அரசு மருத்துவமனை பேருந்து நிலையத்திற்கு வந்து சென்றது அதில் பள்ளி மாணவ மாணவிகள் பணிக்குச் செல்லும் பெண்கள் வந்து இறங்கியது மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுத்தி சட்டமன்ற உறுப்பினரின் செல்போன் பேச்சால் செயல் வடிவம் பெற்றதை பொதுமக்கள் மிகவும் பாராட்டினர் மூன்று நாட்களாக கடையநல்லூர் பக்கம் வராத தடம் எண் 46 ஞிபேருந்து கடையநல்லூர் வந்ததைத் தொடர்ந்து சமூக ஆர்வலர்கள் புகைப்படம் எடுத்த போது பணியில் இருந்த ஓட்டுநர் பொதுமக்கள் மத்தியில் சமூக ஆர்வலர் இடம் சண்டையிட்டது பேருந்து நிலையத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

பழனி ரெண காளியம்மன் கோவில் மண்டல பூஜை: 208 பால்குடங்களுடன் விமரிசையான ஊர்வலம்!

திண்டுக்கல், ஜூன்.18- திண்டுக்கல் மாவட்டம் பழனி நகரின் நடுவில் பிரதானமாக அமைந்துள்ளது அருள்மிகு ரெணகாளியம்மன் திருக்கோயில். மிகவும் பிரசித்தி பெற்ற ரெணகாளியம்மன் கோவில் 48 வது மண்டல பூஜை முன்னிட்டு 208 பால்குடம் கவுன்சிலர் கலையரசி மற்றும் கோவில் நிர்வாகி தங்கராஜ் ஆகியோர் தலைமையில் குபேர பட்டினத்தில் முக்கிய வீதி வழியாக பால்குடம் எடுத்து வந்து அருள்மிகு ரெணகாளியம்மனுக்கு சிறப்பு பால் அபிஷேகம் மற்றும் அலங்காரம் நடத்தப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது. தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. அபிஷேகத்தை முன்னிட்டு நூற்றுக்கு பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது. இந்த விழாவில் 200 க்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதனை முன்னிட்டு, நகராட்சி கவுன்சிலர் கலையரசி மற்றும் கோவில் நிர்வாகி தங்கராஜ் ஆகியோர் தலைமையில், குபேர பட்டினத்தின் முக்கிய வீதிகள் வழியாக 208 பால்குட ஊர்வலம் நடைபெற்றது.தொடர்ந்து, கோவிலை வந்தடைந்த பால்குடங்களைக் கொண்டு அம்மனுக்குச் சிறப்பு பால் அபிஷேகமும், மகா தீபாராதனையும் காட்டப்பட்டது.இந்த விழாவில் 200 மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனை வழிபட்டனர். விழாவின் நிறைவாகப் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதமும், நூற்றுக் கணக்கானோருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

தாம்பரத்தில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தாம்பரம், ஜூன்.18- செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு செங்கல்பட்டு வடமேற்கு மாவட்டம், தமிழக வெற்றி கழகம் தாம்பரம் வடக்கு பகுதி சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக இணை செயலாளர் விஜய்தியாகு, மாவட்ட கழக பொருளாளர் ராஜேந்திரன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் விஜய், வரலட்சுமி, தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் பிரவீன்குமார், வழக்கறிஞர் பிரவீன் ஆகியோர் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது.மேலும் தாம்பரம் வடக்கு பகுதி தலைமை மணிகண்டன், செல்வம், ஜெயபிராகாஷ், முருகானந்தம், கவினேஷ் ஆகியோர் முன்னிலையில் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.இதில் சிறப்பு விருந்தினராக மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் த.சரத்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தாம்பரம் வடக்கு பகுதி தமிழக வெற்றி கழகத்தைச் சேர்ந்த எஸ்.சபீர் மேற்கொண்டிருந்தார். நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஊக்கத்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு வீல்சேர், பெண்களுக்கு தையல் மெஷின், ஏழை மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு மளிகைப் பொருட்கள் மற்றும் பொதுமக்களுக்கு பிரஷர் குக்கர் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன இதில் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் மோரை கோ.தயாளன் பிறந்தநாள் விழா

மாதவரம், ஜூன்.18- சென்னை வடகிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் மோரை கோ.தயாளன் பிறந்த நாள் விழா மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் மோரை ஊராட்சியில் அவரது இல்லத்தில் நடைபெற்றது.விழாவிற்கு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மோரை மு.சதிஷ்குமார், வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் ஏழுமலை, சிவானந்தம், ராம்தாஸ், தேவிமாரி, பொன்.மதுரை முத்து, மோரை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஆர்.திவாகரன், சுற்றுச்சூழல் மாவட்ட அணி துணை அமைப்பாளர் வேதாசெந்தில், இளம்பரிதி, துணை அமைப்பாளர்கள் ஹரிகிருஷ்ணன் (எ) ஸ்டீபன், செள.சதிஷ், கண்ணன், இளங்கோவன், இரா.கவியரசன் மற்றும் வழக்கறிஞர்கள் தேவராஜ், கமல்நாத், பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு சங்கர், மகளிர் அணி ஒன்றிய அமைப்பாளர் சௌந்தர்யா, சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் பாட்ஷா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

நீலகிரி மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் விழிப்புணர்வு முகாம்

உதகை, ஜூன்.18- நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆனைக்கிணங்க, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் வி.சுந்தரேசன் DSP. தலைமையில் 16.06.2026 அன்று உதகை நகர காவல் உட்கோட்டம், உதகை நகரகாவல் மத்திய நிலைய எல்லைக்ககுட்பட்டSRVS மேல்நிலை பள்ளி மாணவ மாணவியர் மத்தியில் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டம், POCSO சட்டம், Cyber crime,,மதுவின் தீமைகள், மாணவ மாணவியருக்கான அரசின் கல்லி,வேலைவாய்ப்பு திட்டங்கள், முதியோர் பாதுகாப்பு உரிமைகள் குறித்து எடுத்து கூறப்பட்டது.பொம்மலாட்ட நிகழ்வு மூலமும் விழிப்புணர்வு கருத்துக்கள் எடுத்து கூறப்பட்டது.

நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கப்படுகிறது

தேனி, ஜூன்.18- தேனி மாவட்ட காவல்துறையினர்.பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குன்னூர் அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் மாவட்ட அளவிலான ஹாக்கி போட்டி

குன்னூர், ஜூன்.18- நீலகிரி மாவட்டத்தில் ,மாவட்ட அளவிலான ஹாக்கி போட்டி. பிளான்டர்ஸ் ராபிட்டஸ் கிரசன்ட் பள்ளி அணிகள் வெற்றி. குன்னூர் அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் ஹாக்கி யூனிட் ஆப் நீல்கிரிஸ் மற்றும் காந்திபுரம் ஸ்போர்ட்ஸ் கிளப் இணைந்து நடத்திய மாதவன் கோப்பை காண ஹாக்கி போட்டி. ஒன்பதாவது ஆண்டு மாதவன் நினைவு கோப்பை ஹாக்கி போட்டி ஏடிசன் பி டிவிஷன் சி டிவி சன் என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்டது இதில் ஏ பிரிவில் உபதலை பிளான்டஸ் அணியும் பி பிரிவில் குன்னூர் ராப்பிடஸ் அணியும் சி பிரிவில் உதகை கிரசன்ட் பள்ளி அணியும் வெற்றி பெற்று கோப்பையை தட்டிச் சென்றனர். முன்னதாக நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் ஊர் மக்கள் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வெற்றி பெற்ற வீரர்களுக்கு ஹாக்கி யூனிட் ஆப் நீல்கிரிஸ் அமைப்பின் துணைத் தலைவர் சுரேஷ்குமார் குட்டி ரவி முன்னாள் ராணுவ வீரர் சந்திரன் ஊர் தலைவர் முக்கியஸ்தர்கள் கோப்பையை வழங்கினர் இந்த நிகழ்ச்சியை ஹாக்கி யூனிட் ஆப் நீல்கிரீஸ் அமைப்பின் பொருளாளர் ராஜா தொகுத்து வழங்கினார் இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீராம் தலைமையிலான காந்திபுரம் ஸ்போர்ட்ஸ் கிளப் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் செய்திருந்தனர் போட்டியின் நடுவர்களாக திலீப் அருள் கிரி தேசிய நடுவர்கள் பிரசாந்த் மணி சலாமத் ஆகியோர் செயல்பட்டனர் வெற்றி பெற்ற வீரர்களுக்கு ஹாக்கி யூனிட் ஆப் நீல்கிரீஸ் அமைப்பின் தலைவர் அனந்த கிருஷ்ணன் செயலாளர் பாலமுருகன் வாழ்த்துக்களை தெரிவித்தனர்

தேனி மாவட்டம்உத்தமபாளையம் வட்டத்தில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சிதிட்டப் பணிகள் மற்றும் குடிநீர் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

உத்தமபாளையம், ஜூன்.18- தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்டப் பகுதிகளில் பல்வேறு துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் மற்றும் குடிநீர் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தேனி மாவட்டத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் குடிநீர் திட்டப்பணிகள், சுகாதாரப்பணிகள், சாலைப்பணிகள், உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உத்தமபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.29.60 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் குடிநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகள் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளையும், மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் பேரூராட்சி அலுவலகக் கட்டுமானப் பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதனைத்தொடர்ந்து, நீர்வளத்துறை சார்பில் சுருளிப்பட்டி பகுதியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.11 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் உத்தமுத்து அணைக்கட்டு மற்றும் அதன் வழங்கு கால்வாய் புனரமைப்புப் பணிகளையும், கூடலூர் அருகில் வைரவன் கால்வாயில் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் சிறப்பு தூர்வாரும் திட்டப்பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், கோம்பை பேரூராட்சிப் பகுதியில் ரூ.3.4 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் முதலமைச்சரின் சிறு விளையாட்டரங்கம் அமைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பணிகளை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

முன்னதாக, உத்தமபாளையம் பேரூராட்சிப்பகுதியில் உள்ள கால்நடை மருந்தகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு, கால்நடைகளுக்கு அளிக்கப்பட்டுவரும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்து, பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பது குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வில், உதவி செயற்பொறியாளர் (நீர்வளத்துறை) மல்லிகா, வட்டாட்சியர் (உத்தமபாளையம்) பாலசண்முகம், செயல் அலுவலர் (உத்தமபாளையம் பேரூராட்சி). இராதாகிருஷ்ணன், உதவிப்பொறியாளர்கள் பிரேம் ராஜ்குமார் (நீர்வளம்), சடாச்சரம் (பேரூராட்சி), அஜய்குமார் (ஊராட்சி) உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

■ திருப்பூர் மாநகராட்சி மண்டலம்1, 15 வேலம்பாளையம், செட்டிபாளையம் பகுதிகளில் உள்ள 33 வணிக நிறுவனங்களில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு குறித்து ஆய்வு செய்யப்பட்டதில் 85 கிலோ அளவிலான தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு 9 வணிக நிறுவனங்களுக்கு ரூ.32,000 அபராதம் விதிக்கப்பட்டது. உடன் சுகாதார ஆய்வாளர்கள் கோகுலநாதன், ஜானகிராமன், அருண்பாண்டி, கீர்த்தனா, மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் பல்லடம் வட்டாட்சியர் அலுவலகத்தில்(ஜமாபந்தி) பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்

திருப்பூர், ஜூன்.18-

திருப்பூர் மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்ளிலும் இன்று 16.06.2026 முதல் 1435 ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெறுகின்றது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 9 வட்டங்களுக்கும் நடைபெற்று வரும் 1,435 பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயத்திற்கு (ஜமாபந்தி) வருவாய் தீர்வாய அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பல்லடம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 1,435 பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் நடைபெற்றது. இந்த வருவாய் தீர்வாயத்தில் (ஜமாபந்தி) பொதுமக்களிடமிருந்து பட்டா மாறுதல், இலவச வீட்டுமனைப் பட்டா, வாரிசுச் சான்று, பிறப்பு மற்றும் இறப்புச் சான்று, குடும்ப அட்டை, சாதிச்சான்று, வருமானச் சான்று, முதல் பட்டதாரிச் சான்று, இருப்பிடச் சான்று, ஆதரவற்ற விதவைச் சான்று, கணினி சிட்டா பெயர் திருத்தம், மின்சார இணைப்பு, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, விதவை உதவித்தொகை, நில அளவை, குடிநீர், பொது சுகாதாரம் சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். மேலும், பல்லடம் உள்வட்டத்திற்குட்பட்ட பணிக்கம்பட்டி, சித்தம்பலம், வடுகபாளையம், பல்லடம், நாரணாபுரம், கரைப்புதூர், கணபதிபாளையம் ஆகிய கிராமங்களில் பாரமரிக்கப்பட்டு வரும் வருவாய்த்துறை தொடர்பான கோப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தணிக்கை மேற்கொண்டார்கள். தொடர்ந்து, வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சியில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்களையும் சமந்தப்பட்ட அலுவலர்கள் முழுமையாக ஆய்வு செய்து மேல்நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் உத்திரவிட்டார்.முன்னதாக, பல்லடம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நில அளவை கருவிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில், உதவி இயக்குநர் (நிலஅளவை) திரு.ஹிரிதாஸ், பல்லடம் வட்டாட்சியர் கோவிந்தசாமி, பல்லடம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரமேஷ், அனுராதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

■ மதுரை மேற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பாக நடைபெற்ற வருவாய் தீர்வாயம் பசலி1435 தணிக்கையில் (ஜமாபந்தி)யில் பொதுமக்களிடம் குறைதீர்க்கும் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் பெற்றுக்கொண்டார்.

■ மதுரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக பெ.ரா.வெற்றிவேந்தன் பொறுப்பெற்றுக்கொண்டார்.

திருப்பரங்குன்றம் கோவில் சுற்றுப்பகுதிகள் தூய்மையாக பராமரிக்க மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் உத்தரவு

மதுரை, ஜூன்.18-

மதுரை திருப்பரங்குன்றம் கோவில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், நேரில் ஆய்வு மேற்கொண்டார். திருப்பரங்குன்றம் கோவில் மற்றும் கிரிவலப் பாதையில் பக்தர்கள் அதிகளவில் வருகை தருவதால், குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை முழுமையாக ஏற்படுத்தவும், குப்பைகளை உடனுக்குடன் அகற்றி சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.மேலும், 15வது மத்திய நிதித் திட்டத்தின் கீழ் ரூ.3.16 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் திருப்பரங்குன்றம் அரசு தாலுகா மருத்துவமனையின் கூடுதல் கட்டிடப் பணிகளையும் ஆய்வு செய்தார். இதனைத் தொடர்ந்து, அவனியாபுரம் வெள்ளைக்கல்லில் உள்ள நாய்கள் காப்பகம் மற்றும் கருத்தடை மையத்தில் நாய்கள் பராமரிப்பு மற்றும் கருத்தடைப் பணிகளை பார்வையிட்டார். அப்பகுதியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள பயோ கேஸ் (இயற்கை எரிவாயு) நிலையத்திற்கான இடத்தையும் ஆய்வு செய்தார்.இந்த ஆய்வில் உதவி ஆணையாளர் ஸ்ரீதேவி, மாநகர்நல அலுவலர் மரு.அர்விந்த் ஜோதி, உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், செயற்பொறியாளர் பாக்கியலெட்சுமி, உதவி செயற்பொறியாளர் இந்திராதேவி, உதவிப் பொறியாளர்கள் அருள்சகாயசேவியர், ரிச்சார்டுபால், சுகாதார அலுவலர் திருமால், சுகாதார ஆய்வாளர் சுப்புராஜ் உட்பட மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பொறியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கிராமத் திருவிழாக்களை முன்னிட்டு திம்மாபுரத்தில் வெள்ளாடு விற்பனை களைகட்டியது

மகாராஷ்டிராவில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆடுகளை ஆர்வமுடன் வாங்கிச் செல்லும் பொதுமக்கள்

கிருஷ்ணகிரி, ஜூன்.18-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அருகே திம்மாபுரம் பகுதியில் மகாராஷ்டிரா மாநிலத்தின் அவுரங்காபாத், பரோஜ் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட வெள்ளாடுகள் விற்பனை செய்யப்பட்டு வருவதால் அப்பகுதியில் விற்பனை களைகட்டியுள்ளது.

மகாராஷ்டிராவில் இருந்து வியாபாரிகள் மொத்தமாக வெள்ளாடுகளை வாங்கி லாரிகள் மூலம் திம்மாபுரம் அருகே உள்ள திறந்த வெளிப்பகுதிக்கு கொண்டு வந்து பட்டி அமைத்து பராமரித்து வருகின்றனர். காலை முதல் மாலை வரை ஆடுகளை அருகிலுள்ள பசும்புற்களில் மேயவைத்து, ஏரி மற்றும் நீர்நிலைகளில் இருந்து தண்ணீர் குடிக்கச் செய்து பராமரித்து வருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

தற்போது மாவிளக்கு திருவிழா, மாரியம்மன் கோவில் திருவிழா, அம்மனுக்கு கூழ் ஊற்றும் விழா மற்றும் பல்வேறு ஊர் பண்டிகைகள் வெகுவிமரிசையாக நடைபெற்று வருகின்றன. இதனை முன்னிட்டு தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை, கெலமங்கலம், காவேரிப்பட்டினம், போச்சம்பள்ளி உள்ளிட்ட பல்வேறு கிராமப் பகுதிகளில் இருந்து ஊர் கவுண்டர்கள், விழாக்குழு நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திம்மாபுரம் பகுதிக்கு வந்து ஆடுகளை வாங்கிச் செல்கின்றனர். ஆடுகளின் தரம், உடல் வளர்ச்சி மற்றும் எடையை ஆய்வு செய்து தேர்வு செய்யும் பொதுமக்கள், 5 ஆடுகள், 10 ஆடுகள் என குழுவாக வாங்கிச் செல்கின்றனர். கோவில் நேர்த்திக்கடன் மற்றும் ஊர் பண்டிகைகளுக்காக வாங்கப்படும் இந்த ஆடுகள் பல இடங்களில் கோவில்களில் பலியிடப்பட்டு, அங்கேயே அசைவ உணவு சமைத்து ஊர் மக்களுக்கு வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. தற்போது உயிருடன் உள்ள வெள்ளாடு ஒரு கிலோ ரூ.400 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆடும் சுமார் 30 கிலோ முதல் 60 கிலோ வரை எடை கொண்டதாக இருப்பதால் ஒரு ஆட்டின் விலை பல ஆயிரம் ரூபாயை எட்டுகிறது. நல்ல தரம் மற்றும் உடல் வளர்ச்சியுடன் காணப்படும் ஆடுகளை வியாபாரிகளும் பொதுமக்களும் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

இதனால் திம்மாபுரம் பகுதியில் இறக்கி விற்கப்படும் ஆடுகளில் கணிசமான அளவு அங்கேயே விற்பனையாகி விடுவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். மீதமுள்ள ஆடுகளை மாலை நேரங்களில் மீண்டும் வாகனங்களில் ஏற்றி கோயம்புத்தூர், மதுரை உள்ளிட்ட பெருநகரங்களுக்கு கொண்டு சென்று மொத்த மற்றும் சில்லறை விற்பனை செய்து வருகின்றனர்.

திம்மாபுரம் பகுதியில் நடைபெறும் இந்த வெள்ளாடு விற்பனை, கிராமப்புற திருவிழா காலத்தை முன்னிட்டு வியாபாரிகளுக்கு நல்ல வருமானத்தையும், பொதுமக்களுக்கு தரமான ஆடுகளை எளிதில் வாங்கும் வசதியையும் ஏற்படுத்தி வருவதாக கூறப்படுகிறது.

ரேஷன் கடை பணியாளர்கள் கொந்தளிப்பு! பணிச்சுமை குறைக்காவிட்டால் கடும் போராட்டம்?

மதுரை, ஜூன்.18-

ரேஷன் கடை பணியாளர்களுக்கு கூடுதல் பணிச்சுமையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை கைவிட்டு, பல்வேறு கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ரேஷன் கடை பணியாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக மதுரை மாவட்ட ஆட்சியரிடம் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஜி. ராஜேந்திரன் தலைமையில் மனு அளிக்கப்பட்டது.அந்த மனுவில், ரேஷன் கடை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள e-KYC பணிகளை 100 சதவீதம் நிறைவு செய்ய கூடுதல் அவகாசம் வழங்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. மேலும், நுகர்வோர் வாணிபக் கழக கிடங்குகளில் இருந்து வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களில் ஏற்படும் பற்றாக்குறைக்கு பணியாளர்களை பொறுப்பாக்கக் கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல், ரேஷன் கடைகளுக்கு தேவையான பொருட்களை உரிய நேரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், பணியாளர்களின் பணிச்சுமையை அதிகரிக்கும் புதிய நடைமுறைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளும் மனுவில் இடம்பெற்றுள்ளன.ரேஷன் கடை பணியாளர்களின் நலன் மற்றும் பொதுமக்களுக்கு தடையின்றி சேவை வழங்கும் நோக்கில் அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

■ மதுரை மாவட்டம், மேற்கு வட்டம், துவரிமான் நாகமலை அடிவாரத்தில் அமைந்துள்ள புல்லூத்து நீருற்றுப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை கட்டமைப்பு வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் சாலை வசதிகள் மேம்பாட்டு பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161